உ

குகமயம்

வேலும் மயிலும் துணை

# நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை தலைவரின் ஆண்டறிக்கை

25 புரட்டாதி 2016

எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்திருக்கும் உங்கள் அனைவரையும் எமது நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபையின் சார்பில் அன்புடன் வரவேற்கிறேன். எம்பெருமான் திருமுருகனும் அவரது பரிவாரங்களும் கடந்த 2013ம் ஆண்டு ஆனிமாதம் 8ந் திகதி ஒரு சுபநேரத்தில் தங்களது புதிய இல்லத்திற்கு குடிபுகுந்தார்கள். இந்த சுப நிகழ்ச்சிக்கு நியூசிலாந்தின் பல இடங்களிலிருந்தும் பல பக்தர்கள் மண்டபம் நிறைய வந்திருந்து முருகப்பெருமானின் ஆசியைப் பெற்றார்கள். மிகவும் குறிகிய காலத்தில் இந்தச் சாதனையைப் படைக்க எம்பெருமான் கந்தவேளே எமக்கு உறுதுணையாக இருந்தார். தனக்கு உவமையில்லாதவர் "தாயினும் சிறந்த தலைவர்" எம் ஆறுமுகக் கடவுள் அவரது தாழ்சேர்ந்தோம் அழகான சிறுகோயில்கள் உருவாகின.

எமது புதிய கோயிலில் இப்போது புதிதாக பாலலிங்கம், கேதாரலிங்கம் , விஸ்ணு, வைரவர் , சண்டேஸ்வரர் ஆகியோர் நிர்மாணிக்கப்படடுள்ளார்கள். பாலலிங்கத்திற்கு பக்தர்களே பாலாபிஷேகம் செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. மூலமூர்த்தியான முருகப்பெருமானுக்கு முன்னர் பலிபீடமும் , மயூரம் , கொடிக்கம்பம் பிள்ளையார் ஆகியன நிறுவப்பட்டுள்ளது. தற்போது வெளி வீதிசுற்றவும் வசதிகள் செய்துள்ளோம். அத்துடன் 2015ம் ஆண்டு முதல் தைப்பூச தினத்தில் எமது கோயிலில் 15ம் நாள் திரு விழாவையும் மற்றும் தேரோட்டம் தீர்த்தம் ஆகியவையையும் நடத்தி முடித்துள்ளோம்.

## வருடாந்த உற்சவம் 2016

கடந்த வருடம் எமது கோயிலின் வருடாந்த மகோற்சவ விழா கனடாவிலிருந்து வந்த நாதஸ்வர மேள வாத்திய இசையுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பிரசித்திபெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சாபிகேசனின் வாரிசான நாகேந்திரன் நாதஸ்வரம் வாசிக்க திரு பழனிவேல் ஜெகதீஸ்வரன் அவர்கள் மங்கள மேளம் வாசித்தார். இவ்விசையைக் கேட்கவும் பக்தர்கள் கூட்டம் நிரம்பியது. இதேபோன்று 2017ம் ஆண்டுக்குரிய திருவிழாவையும் நடத்த எமது திருப்பணிச்சபை ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சென்ற வருடம் வழங்கிய ஒத்துழைப்பை எதிர்வரும் வருடமும் வழங்கி இந்த வருடாந்த திருவிழாவை சிறப்பாக நடைபெற உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம. சென்ற முறைவந்து சிறப்பித்த நாதஸ்வர இசைக்குழுவை இம்முறையும் அழைக்க ஏற்பாடு செய்துள்ளோம் என்ற மகிழ்ச்சியான செய்தியினையும் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

## இளையோரின் பங்களிப்பு

நமது இளையோர்களும் சிறுவர் சிறுமியர்களும் எமது கோயிலின் வருடாந்த நிகழ்சிகளான பண்ணும் பரதமும் , முத்துச்சரம் , இன்னிசைத் தென்றல் ஆகியவற்றில் கலந்து சிறப்பித்தார்கள். வெள்ளிக்கிழமை மாலைநேரப்பூசையின்போது திருமுறைகள்பாடி எமது சமயப்பண்பாட்டைப் பின்பற்றுகிறார்கள். இவ்வாறாக எமது இளையோர் சங்கீதம் விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி அவர்கள் உடல் ஆரோக்கியத்தையும் மனவளர்ச்சியையும் வளர்த்துக்கொள்கின்றார்கள். மற்றும் கோயிலில் நடைபெறும் முக்கிய பூசைகளில் கலந்துகொண்டு பிரசாதம் வழங்குதல் நிகழ்ச்சிகளின்பின் கோயிலைச்சுத்தப்படுத்தல், அலங்கரித்தல் எமது ஆலய உணவுப்பொதி விநியோகம் மற்றும் கோயில் வலைத்தள அபிவிருத்தி ( website development) என்பவற்றில் முக்கிய பங்காற்றுகிறார்கள். குறிப்பாக சென்றவருடம் எமது நிருவாக சபையில் இணைந்து கொண்ட இளைஞர் அஞ்சுகன் கதிர்காமநாதன் அவர்கள் எமது கோயிலுக்கு ஆற்றும் தொண்டு பாராட்டுக்குரியதாகும்.

## கோயிலின் மிகுதி வேலைகள் மற்றும் நிதிநிலமை

2015/16 ஆண்டில் கோயிலின் முன்புறத்தில் Steel fencing ஒரு முருக பக்தரின் நன்கொடையினால் நிறைவு பெற்றது. கோயிலின் உட்புறத்தில் Tiling, Carpetting ஆகியனவும் சில தொண்டர்கள் அளித்த நன்கொடையினாலே நிறைவுபெற்றது. இக்கோயில் வேலைகள் நிறைவேற்ற உதவிபுரிந்த எமது முருகபக்தர்களுக்கு மனமார்ந்த நன்றிகள்.

பணப்பற்றாக்குறை காரணமாக பக்தர்கட்குரிய வசதிகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை. Auckland Council மிகுதி வேலைகளைத் துரிதப்படுத்தி COCக்கு விண்ணப்பிக்குமாறு கோரியுள்ளார்கள். அத்துடன் மிகுதி வேலைகளை முடிக்க ஒருவருட கால அவகாசமும் வழங்கியுள்ளார்கள். பின்வருவன முடிக்க வேண்டிய வேலைகளாகும்.

1. Insulation and Ceiling
2. Heating and Air Conditioning
3. கிழக்கு மேற்கு சுவர் வேலைகள்
4. சமூகமண்டப வேலைகள்

கடந்த தைமாதம் எமது நிருவாக சபை மீண்டும் மேலதிக கடனாக டொலர் 400,000ஐ ASB வங்கியிலிருந்து பெற்றுக்கொண்டு மிகுதி வேலைகளை ஒரு contractorக்கு ஒப்படைத்தது. கோயிலில் தினமும் நடைபெறும் விழாக்கள் பூசைகள் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் வேலைகள் நிறைவுபெறவில்லை. எனினும் புரட்டாதி மாதம் 30ம் திகதிக்கு முன்னர் இவ்வேலைகளை நிறைவு செய்வதற்கு எமது Building committee முயற்சிசெய்து வருகின்றது. இந்தக் committeeயில் முக்கிய பணியாற்றிவரும் திரு சத்தியசெல்வன் மற்றும் திரு மனோகரன் ஆகியோருக்கு எனது

மனமார்ந்த நன்றி. இதுவரை உதவியளித்தது போன்று இராஜகோபுர வேலையையும் நிறைவேற்ற உங்கள் உதவியையும் நாடிநிற்கின்றோம். குறைந்தபட்சமாக இப்பணியினை நிறைவேற்ற டொலர் 200,000 தேவைப்படுகின்றது. இத் தெய்வீகப்பணி நிறைவேற உங்கள் அனைவரதும் பேராதரவை நாடிநிற்கின்றோம். எங்கள் காலத்திலேயே இப்பணிகளைச் செய்து முடித்தால் தென்குமரிக் கண்டத்திலும் ஒரு அழகான முருகன் கோயில் அமைத்த பெருமையும் இறையருளும் நம் எல்லோருக்கும் வந்துசேரும்.

இவையாவற்றிக்கும் நிதிசேர்க்கும் முகமாக பல முயற்சிகளை எமது தொண்டர்கள் செய்து வருகிறார்கள். உதாரணமாக தீபாவளி Food festival, Musical Journey ஆகியவற்றில் பல தொண்டர்களின் உழைப்பால் ஒவ்வொருவருடமும் டொலர் 15,000 சேர்க்கப்படுகின்றது. சிறுதுள்ளி பெருவெள்ளமாக தொடர்ந்தும் உதவுங்கள். இது நாம் எமது மக்களுக்காகவும் எதிர்காலச் சந்ததியினருக்காகவும் செய்யும் தொண்டேயன்றி எமது இறைவன் மகேசனுக்காகச் செய்யும் தொண்டல்ல. எமது காலத்திலேயே இவ்வேலைகள் யாவற்றையும் பூர்த்திசெய்ய எங்களுக்கு பக்கபலமாக இருந்து உதவுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்வதுடன் எம் முருகப்பெருமானின் ஆசி உங்கள் அனைவருக்கும் கிடைக்கவும் பிரார்த்திக்கின்றேன்.

மேலும் இக்கோயிலின் வளர்ச்சிக்கும் நமது சைவப்பணி தொடரவும் தொடர்ந்து உதவிசெய்துவரும் தொண்டர்கள் அனைவருக்கும் எமது நிர்வாக சபையின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெருவித்துக்கொள்கின்றோம். மற்றும் தினசரி காலை மாலைப் பூசைகளையும் முக்கியமான வருடாந்த திருவிழாக்களையும் சிறப்பாகச் செய்து எமது கோயிலின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டுவரும் எமது ஆலயப் பிரதம குருக்கள் வேதாகமமாமணி பிரம்மஸ்ரீ ராஜராஜேஸ்வரக் குருக்கள் மற்றும் பிரம்மஸ்ரீ மயூரநாதக் குருக்கள் ஆகியோருக்கும் எமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெருவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இங்கு குறிப்பிடாத பலர் பல்வேறு வழிகளில் எமது ஆலயத்திற்கு ஒத்துழைப்பை வழங்கிய வண்ணம் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் எமது ஆலய நிர்வாக சபையின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெருவித்துக் கொள்கின்றோம்.

இந்த வருடாந்த அறிக்கையை நிறைவு செய்யுமுன்னர் நான் அண்மையில் அவதானித்த ஒரு செய்தியை உங்களிடம் தெருவித்துக்கொள்ள விரும்புகின்றேன். எத்தனையோ ஆலயங்கள் ஒக்லாந்தில் அமைக்கப்பட்டு விழாக்கள் உற்சவங்கள் நடைபெற்றாலும் எமது கோயிலுக்குவரும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகினறது. ஒரு தேவி பக்தர் காஷ்மீரைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இக்கோயிலின் சக்திபற்றி கண்கலங்கிப் பேசினார். இங்குள்ள தெய்வங்கள் தாங்கள் கேட்பதையெல்லாம் தருவதாகக் கூறினார்.

இறுதியில் சிறுவர் சிறுமியர் இங்கு பாடும் தேவார புராணங்கள் இக்கோயிலுக்கு தம்மை அழைக்கின்றன என பல பக்தர்கள் என்னிடம் தெருவித்திருக்கின்றார்கள். இவையெல்லாம் கேட்கும் போது எந்தநோக்கோடு இக்கோயிலை அமைத்தோமோ அது இப்போது முழுதாக நிறைவேறியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கந்தனை எந்த உறவு கொண்டு வழிபட்டாலும் அவனிடம் யாம் வேண்டுவது

"பொன்னும் பொருளும் போகமும் அல்ல
அருளும் அறனும் அன்பும் மூன்றுமே"

"உருவா யருவா யுளதாய் யிலதாய்
மருவா மலராய் மணியா யொளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவ்ாய் வருவாய் அருள்வாய் குகனே"

நன்றி

வணக்கம்

க.குமாரசாமி.

கந்தையா குமாரசாமி

தலைவர்

நியூசிலாந்து திருமுருகன் திருப்பணிச்சபை

இல 145 தேவாலய வீதி

ஒக்லாந்து, நியூசிலாந்து.